## சுருக்கம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு ரூ.144.86 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 2) துறை

அரசாணை (நிலை) எண்.134 நாள்: 25 .9.2007.

படிக்க:

நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண் 2620/2007/குவ3 நாள் 21.09.07

-------

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு ரூ.144.86 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோக மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், மக்களுக்கு தேவையான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப திருச்சிராப்பள்ளி மாநகர மக்கள் பயனடையும் வகையில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தப்படும் என 2006-2007–ஆம் ஆண்டிற்கான இத்துறைக்கான மானியக் கோரிக்கையின் விவாதத்தின் போது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

2. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் குடிநீர் திட்ட மேம்பாட்டுப் பணிக்கான விரிவான திட்ட அறிக்கையினை தயாரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது எனவும் இத்திட்டத்திற்கான தேவையினையும், தற்போதைய குடிநீர் விநியோகம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

| வ. எண் | நீர் ஆதாரம் | அளவு ( மில்லியன் லிட்டர் / நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | கம்பரசம்பேட்டை<br>அ) பிரதான உந்து நிலையம் (1985)<br>ஆ) டர்பைன் (1976) | <br>18.00<br>12.00 |
| 2. | பெரியார் நகர் பிரதான நீர் சேகரிக்கும் கிணறு (1982) | 40.00 |
| 3. | ஜீயபுரம் (பிராட்டியூர்) (1997) | 5.45 |
| | மொத்தம் | 75.45 |

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் தற்போதைய குடிநீர் விநியோக கட்டமைப்பினை சீரமைக்கவும் புறநகர் பகுதிகளில் அமைந்து வரும் குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் வழங்கப்பட வேண்டியுள்ளது என்றும் 2039 ஆம் ஆண்டின் அதிகபட்ச மக்கள் தொகையான 11,36,000க்கு நாள் ஒன்றுக்கு 168.71 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவைப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

3 நகராட்சி நிர்வாக ஆணையாளர் தனது கடிதத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடனும், கீழ்க்காணும் நிதியுதவிகளுடனும் செயல்படுத்தப்படவுள்ளது என தெரிவித்துள்ளார்.

| வ.எண் | நிதி ஆதாரம் | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் மூலமாக ஜப்பான் நிதி நிறுவனத்தின் நிதியுதவி | 93.16 |
| 2. | மாநகராட்சி பொது நிதி / பொதுமக்களின் பங்களிப்பு | 24.84 |
| 3. | மாநில அரசு மான்யம் | 25.00 |
| 4. | திட்டச் செயலாக்கத்தின் போதான வட்டி | 1.86 |
| | மொத்தம் | **144.86** |

4. திட்டத்தின் அம்சங்களை இயன்ற அளவில் தனியார் மயமாக்குவதன் மூலம், திட்டம் நிறைவேற்றுதல் மற்றும் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு பராமரித்தல் ஆகியவற்றை மாநகராட்சி மேற்கொள்ளும் என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண் 258, நாள் 20.09.2007ல் குடிநீர்க் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றை கீழ்க்காணுமாறு உயர்த்துவதற்கு தீர்மானித்துள்ளது என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| வைப்புத் தொகை | வீட்டு உபயோக இணைப்புகளுக்கு | ரூ.5000/– |
| | வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புகளுக்கு | ரூ.10,000/– |
| | வணிக நிறுவனங்களுக்கு | ரூ.10,000 |
| பயனீட்டு கட்டணம் | வீட்டு உபயோக இணைப்புகளுக்கு | மாதம் ஒன்றுக்கு ரூ.160/– |
| | வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புகளுக்கு | மாதம் ஒன்றுக்கு ரூ.600/– |
| | வணிக நிறுவனங்களுக்கு | மாதம் ஒன்றுக்கு ரூ.600/– |

6. இத்திட்டம் நிதி அடிப்படையில் செயல்படுத்ததக்கதாகவும் மற்றும் சுய அடிப்படையில் செயல்படும் வகையில் மேற்கண்ட வைப்புத் தொகை மற்றும் பயனீட்டு கட்டணம் ஆகியவை கணக்கிடப்பட்டுள்ளது எனவும், மேற்சொன்ன வைப்புத் தொகை மற்றும் கட்டண வீதங்களை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் அவர்கள் 18.9.2007 அன்று நடத்திய கூட்டத்தில், தமிழ்நாடு நகர்ப்புற

உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் தெரிவித்த நிதி ஆதாரங்களின் அடிப்படையில் மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண் 258, நாள் 20.09.2007ல் தீர்மானித்துள்ளது எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

7. எனவே, இத்திட்டத்திற்கான நிதி அடிப்படையில் செயல்படுத்துவது குறித்த தன்மைகள் பற்றி தெரிவிக்குமாறு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகத்தினை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனது 20.9.2007ம் தேதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளது என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகை மற்றும் கட்டணங்கள் குறித்த மாநகராட்சி மன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் ஆலோசனை தெரிவித்துள்ள கீழ்க்காணும் நிதி ஆதாரங்களின்படி செயல்படுத்தப்படவுள்ள, ரூபாய் 144.86 கோடி மதிப்பீட்டிலும் (திட்டச் செயலாக்கத்தின் போதான வட்டி உட்பட), ஆண்டு பராமரிப்பு செலவு ரூபாய் 3.53 கோடி மதிப்பீட்டிலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி குடிநீர் விநியோக மேம்பாட்டு திட்டத்திற்கான செயற்குறிப்பினை பரிந்துரைத்து இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதியை அளிக்குமாறும், நகராட்சி நிர்வாக ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ.எண் | நிதி ஆதாரம் | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் மூலமாக ஜப்பான் நிதி நிறுவனத்தின் நிதியுதவி | 93.16 |
| 2. | மாநகராட்சி பொது நிதி / பொதுமக்களின் பங்களிப்பு | 24.84 |
| 3. | மாநில அரசு மான்யம் | 25.00 |
| 4. | திட்டச் செயலாக்கத்தின் போதான வட்டி | 1.86 |
| | மொத்தம் | **144.86** |

8. மேலே பத்தி.7ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து, அக்கருத்துருவில் தெரிவித்துள்ள நிதி ஆதாரங்கள் தொடர்பாக அந்தந்த நிதி நிறுவனங்களின் மூலம் நிதியுதவி மற்றும் மானியம் பெற தனித்தனியாக பரிசீலித்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் முடிவு எடுத்துக் கொள்ளலாம் எனவும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு குடிநீரின் திட்ட மேம்பாட்டுத் திட்டத்தினை ரூபாய் 144.86 கோடி (ரூபாய் நூற்று நாற்பத்தி நான்கு கோடி மற்றும் என்பத்தாறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

9. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.3087/FS/P/07, நாள். 22.9.2007—ல் வழங்கப்பட்டுள்ள இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர்,
தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை- 17
ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி
மாநில கணக்காயர், சென்னை-18
மாநில கணக்காயர், சென்னை-18 (பெ.உ.)
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை -9
நகல்:
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதியமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதித்துறை, சென்னை -9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.1/மா.ந.2/வ.செ) துறை, சென்னை-9

-/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-

பிரிவு அலுவலர்.